



# சக்கர வியூகம்

SAKKRA VIYUGAM

புலனாய்வு நாளிதழ்

"தேமதுரத் தமிழோசை உலகமெலாம்"






Website: www.sakkraviyugam.com | PRGI:TNTAM/25/A1018 | Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01 | ISSUE: 246 | 28.2.2026 | SATURDAY | MAASI : 16 | PRICE : RS.5/-

மலர் : 01 | இதழ் : 246 | 28.2.2026 | சனிக்கிழமை | மாசி : 16 | விலை : ரூ.5/-


## நாளை

# "பிரதமர் மோடி தமிழகம் வருகை!"

## திருப்பரங்குன்றம் கோயிலில் வழிபட திட்டம்

புதுடெல்லி: பிப்.28-

ரூ.7,100 கோடி மதிப்பிலான திட்டங்களை தொடங்கிவைக்க மார்ச் 1ம் தேதி தமிழகத்துக்கு வருகை தரும் பிரதமர் நரேந்திர மோடி, திருப்பரங்குன்றம் முருகன் கோயிலில் சாமி தரிசனம் செய்ய இருக்கிறார்.

பிரதமர் நரேந்திர மோடியின் தமிழகம் மற்றும் புதுச்சேரிக்கான பயண விவரங்களை பிரதமர் அலுவலகம் வெளியிட்டுள்ளது. அதன் விவரம்:

ராஜஸ்தான் மற்றும் குஜராத் பயணத்தைத் தொடர்ந்து பிரதமர் நரேந்திர மோடி பிப்.28ம் தேதி இரவு 9 மணி அளவில் சென்னை வருகிறார். (மார்ச் 1) காலை 11.45 மணி அளவில் புதுச்சேரி செல்லும் பிரதமர், அங்கு ரூ.2,700 கோடி மதிப்பிலான முடிவுற்ற திட்டங்களை தொடங்கிவைப்பதோடு, புதிய திட்டங்களுக்கும் அடிக்கல் நாட்டுகிறார். இந்த நிகழ்ச்சியில் பிரதமர் உரை நிகழ்த்த இருக்கிறார்.



அதன் பின்னர் பிற்பகல் 3 மணி அளவில் மதுரை செல்லும் பிரதமர், ரூ.4,400 கோடி மதிப்பிலான நிறைவடைந்த திட்டங்களை தொடங்கிவைப்பதோடு, புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்ட இருக்கிறார். மேலும், இந்த நிகழ்ச்சியில் அவர் உரை நிகழ்த்த இருக்கிறார். இதையடுத்து, மாலை 4 மணி அளவில் திருப்பரங்குன்றத்தில் உள்ள அருள்மிகு சுப்ரமணிய சுவாமி கோயிலுக்குச் செல்லும் பிரதமர் அங்கு சுவாமி தரிசனம் செய்ய உள்ளார்.

புதுச்சேரி திட்டங்கள்: பிரதமர் இபேருந்து சேவை திட்டத்தின் கீழ் மின்சார பேருந்துகளின் சேவையை பிரதமர் தொடங்கிவைக்கிறார். பொருளாதார ரீதியாக நலிவடைந்த பிரிவினருக்கான குடியிருப்புகள் மற்றும் புதுச்சேரி அரசின் முக்கியமான கழிவுநீர் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் திட்டங்களை பிரதமர் தொடங்கிவைக்கிறார். காரைக்காலில் உள்ள தேசிய தொழில்நுட்ப நிறுவனத்தின் ஏபிஜே அப்துல் கலாம் பிளாக், கங்கா விடுதி ஆகியவற்றை துவக்கிவைக்கும் பிரதமர், ஜிப்மரில் உள்ள பிராந்திய புற்றுநோய் மையத்தின் நவீனமயமாக்கல் திட்டத்தையும் துவக்கி வைக்க உள்ளார்.

750 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள காரசூர் சேதாரபேட்டை தொழிற்பேட்டையை நாட்டுக்கு அர்ப்பணிக்கும் பிரதமர், 41 கிராமப்புற சாலைகள் கட்டுமானம், சுகாதாரத் திட்டங்கள் ஆகியவற்றை துவக்கி வைக்கிறார். மேலும், நகர்ப்புற சாலைகள், வடிகால் அமைப்புகள், மாணவர் விடுதிகள், விளையாட்டு வசதிகள் போன்ற பல்வேறு திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டுகிறார்.

தமிழக திட்டங்கள்: மொரப்பூர், பொம்மிடி, ஸ்ரீவில்லிபுத்தூர், சோழவந்தான், மணப்பாறை, பொள்ளாச்சி, காரைக்குடி, திருவாரூர் ஆகிய மேம்படுத்தப்பட்ட ரயில் நிலையங்களை திறந்து வைக்கும் பிரதமர், சென்னை கடற்கரை சென்னை எழும்பூர் இடையே 4வது ரயில் பாதையை நாட்டுக்கு அர்ப்பணிக்கிறார்.

கும்பகோணம், ஏர்காடு, வேலூர் ஆகிய நகரங்களில் ஆகாஷவாணி பண்பலை வானொலிகளை பிரதமர் தொடங்கிவைக்கிறார். மேலும், தேசிய நெடுஞ்சாலை 332ஏன் கீழ் மரக்காணம்புதுச்சேரி சாலை விரிவாக்கம், தேசிய நெடுஞ் சாலை 87ன் கீழ் பரமக்குடி ராமநாதபுரம் சாலை விரிவாக்கம் ஆகிய திட்டங்களுக்கு பிரதமர் அடிக்கல் நாட்ட உள்ளார்.

## "அதிமுகவுக்கு இனி எதிர்காலம் இல்லை; பழனிசாமிக்கு வெற்றியே கிடையாது"

### திமுகவில் இணைந்த ஓபிஎஸ் கருத்து

சென்னை: பிப்.28-

திமுகவில் இணைந்தபின்னர் ஓ.பன்னீர்செல்வம் அளித்த பேட்டியில், "அண்ணா ஆரம்பித்த தாய்க் கழகமான திமுகவில் மன மகிழ்ச்சியுடன் இணைந்துள்ளேன். அண்ணா, கருணாநிதி காட்டிய வழியில் அனைவரையும் அரவணைத்து செல்லும் வகையில் கட்சியையும், ஆட்சியையும் மு.க.ஸ்டாலின் வழிநடத்தி வருகிறார்.



அரசியலில் சர்வாதிகாரமாக ஆணவப் போக்கோடு நடந்துகொள்ளும் எடப்பாடி பழனிசாமி, எந்த காலத்திலும் இனி வெற்றிபெற முடியாது எனும் சூழலை அதிமுகவுக்கு உருவாக்கியுள்ளார். ஜெயலலிதா மறைவுக்கு பின்னர் லட்சக்கணக்கான அதிமுக தொண்டர்கள் திமுகவில் இணைந்துள்ளனர்.

ஓர் அரசியல் இயக்கத்தை எப்படி நடத்த வேண்டும் என்ற இலக்கணத்தோடு ஸ்டாலின் கட்சியை வழிநடத்துகிறார். முதல்வர் ஸ்டாலின் கடந்த 5 ஆண்டுகளில் செய்த சாதனைகள் மக்களை முழுமையாகச் சென்றடைந்துள்ளது. அடித்தட்டு, ஏழை எளியவர்கள், பெண்கள் மன மகிழ்ச்சியோடு இந்த ஆட்சியில் உள்ளனர். அண்ணா, கருணாநிதி எப்படி அனைத்து கட்சிகளையும் தாயுள்ளத்தோடு சட்டப்பேரவையில் அணுகினாரோ, அதே பாணியில் முதல்வர் ஸ்டாலினும் செயல்படுகிறார்.

எடப்பாடி பழனிசாமிக்கு தலைமைப் பண்பு இல்லை. தென்மாவட்டங்களின் எந்தவொரு தலைவரும் வளர்ந்துவிடக் கூடாது என எடப்பாடி பழனிசாமி நினைக்கிறார். அவ்வாறு அதிமுகவில் தென் மாவட்டங்களில் வளரும் தலைவர்களை பழனிசாமி அழித்து வருகிறார். பழனிசாமியால் அதிமுக அழிவுப்பாதையில் செல்கிறது.

கடந்த காலங்களில் அதிமுகவில் ஏற்பட்ட கசப்பான சம்பவங்களால் பாதிக்கப்பட்டேன். அனைவரையும் அரவணைக்கும் போக்கு இப்போது அதிமுகவில் இல்லை. அதனால் எந்த அழுத்தமும் இல்லாமல், சுயமாக முடிவெடுத்து திமுகவில் இணைந்துள்ளேன். வரும் சட்டப்பேரவைத் தேர்தலில் ஸ்டாலின் வாய்ப்புக் கொடுத்தால் போட்டியிடுவேன்.

எனவே, வரும் தேர்தலில் திமுக மீண்டும் வென்று ஆட்சியமைக்கும். கடந்த 5 ஆண்டுகளில் அனைத்து மக்களுக்கும் பயனளிக்கும் வகையில் பல்வேறு திட்டங்களை நிறைவேற்றி, சிறப்பான ஆட்சியை முதல்வர் ஸ்டாலின் நடத்தி வருகிறார். மீண்டும் திமுக ஆட்சியே தமிழகத்தில் அமையும்.

நான் சரியான முடிவை எடுத்துள்ளதாக அனைவரும் பாராட்டி வருகின்றனர். திமுக 'தீய சக்தி' என்று நான் ஒருபோதும் சொன்னது கிடையாது. அதிமுகவுக்கு இனி எதிர்காலமே இல்லை." எனத் தெரிவித்தார்.

## சின்னாளபட்டி பேரூராட்சி கூட்டத்தில் ரூ. 1.30 கோடி பணிகளுக்கு ஒப்புதல்: அமைச்சர் ஐ.பெரியசாமிக்கு பாராட்டு

சின்னாளபட்டி, பிப்.28

சின்னாளபட்டி பேரூராட்சி மன்ற சாதாரண கூட்டம் பேரூராட்சி மன்ற தலைவர் அறையில் நடைபெற்றது. கூட்டத்திற்கு பேரூராட்சி மன்றத்தலைவர் பிரதீபா கனகராஜ் தலைமை தாங்கினார். துணைத்தலைவர் ஆனந்தி பாரதிராஜா முன்னிலை வகித்தார். செயல் அலுவலர் இளவரசி வரவேற்று பேசினார். அலுவலக பணியாளர் கலைச்செல்வி தீர்மான நகலை வாசித்தார். கூட்டத்தில் பிறப்பு இறப்பு பதிவு, வரிவசூல் நிலுவை, அணைப்பட்டியிலிருந்து குடி தண்ணீர் வரும் குழாய் மற்றும் மின் மோட்டார் பராமரிப்புக்கு ரூ. 34.50 லட்சம் மதிப்பில் ஒப்பந்ததாரருக்கு பணிக்கான ஆணை வழங்குவது, மற்றும். 12வது வார்டு மற்றும் 17வது வார்டு பகுதியில் ரூ. 95 லட்சம் மதிப்பில் தார்ச்சாலை அமைக்கும் பணிக்கான ஒப்புதல் வழங்குவது, பேரூராட்சிக்கு சொந்தமான குமரன் பூங்கா கடை எண் 3, 4, 6 மற்றும் 1, 2, 3 கடைகளுக்கு வாடகை அடிப்படையில் நடத்திக் கொள்வது, தொண்டு நிறுவங்கள்



மூலம் தெரு நாய்களுக்கு அறுவைச் சிகிச்சை செய்வதற்கு மன்றம் ஒப்புதல் வழங்குதல் உட்பட 10 தீர்மானங்கள் கொண்டு வரப்பட்டது.

தார்ச்சாலை அமைக்கும் பணிக்கான தீர்மானம் கொண்டுவரப்;பட்டபோது கவுன்சிலர்களிடையே வாக்குவாதம் ஏற்பட்டது. மேட்டுப்பட்டி பகுதி மக்களின் கோரிக்கையை ஏற்று தனது சொந்த செலவில் இடம் வாங்கிக் கொடுத்த ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களை பாராட்டி 9வது வார்டு திமுக உறுப்பினர் சுப்பிரமணி கொண்டு வந்த தீர்மானம் கைதட்டலுடன் ஏகமனதாக நிறைவேற்றப் பட்டது. கூட்டத்தில் திமுக வார்டு உறுப்பினர்கள் செல்வக்குமாரி, சங்கரேஸ்வரி, ஜெயக்கிருஷ்ணன், வேல்விழி, ஹேமா, தாமரைச்செல்வி, காமாட்சி, சாந்தி, ராஜாத்தி, ராசு, ரவிக்குமார், சுப்ரமணி, ராஜசேகர், அமுல்ராஜ், செல்வி உட்பட வார்டு உறுப்பினர்கள், சுகாதார அலுவலர் மணிகண்டன் அலுவலக பணியாளர்கள் ராமமூர்த்தி, கணக்காளர் கலைச்செல்வி உட்பட பேரூராட்சி பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

## நீதியை நிலைநாட்டிய நெஞ்சுரம் மிக்க தலைவர்

### இரங்கல் கூட்டத்தில் அமைச்சர் ஐ.பெரியசாமி புகழாரம்

திண்டுக்கல், பிப்.28

"இந்திய அரசியலில் எப்படி வேண்டுமானாலும் வாழலாம் என்ற நிலை இருக்க, இப்படித்தான் வாழ வேண்டும் என வாழ்ந்து காட்டியவர் தோழர் ஆர்.நல்லகண்ணு" என்று ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் புகழாரம் சூட்டினார்.



கட்சி எல்லைகள் கடந்த அஞ்சலி:

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் முதுபெரும் தலைவர் ஆர்.நல்லகண்ணு மறைவையொட்டி, திண்டுக்கல்லில் திமுக, சிபிஐ, சிபிஎம், அதிமுக உள்ளிட்ட அனைத்துக் கட்சிகளின் சார்பில் பிரம்மாண்ட இரங்கல் ஊர்வலம் நடைபெற்றது. மெங்கில்ஸ் ரோட்டில் உள்ள இந்திய கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகத்தில் தொடங்கிய இந்த ஊர்வலம், நகரின் முக்கிய வீதிகள் வழியாகப் பேருந்து நிலையத்தை வந்தடைந்தது.

அமைச்சர் ஐ.பெரியசாமி உரை:

இரங்கல் கூட்டத்தில் பேசிய அமைச்சர் ஐ.பெரியசாமி, "தோழர் ஆர்.நல்லகண்ணு அவர்கள் நீதிமன்றத்தில் கூட தனக்காக வழக்கறிஞர்களை வைக்காமல், அவரே வாதாடி நீதியை நிலைநாட்டியவர். அவரது மறைவு கம்யூனிஸ்ட் கட்சிக்கு மட்டுமின்றி, ஒட்டுமொத்த தமிழகத்திற்கும் ஈடு செய்ய முடியாத இழப்பு" என உருக்கமாகப் பேசினார்.

பங்கேற்ற தலைவர்கள்:

இந்த நிகழ்வில் சிபிஎம் மத்தியக்குழு உறுப்பினர் கே.பாலபாரதி, முன்னாள் அமைச்சர்கள் சி.சீனிவாசன், இரா. விஸ்வநாதன் (அதிமுக), திண்டுக்கல் மேயர் இளமதி ஜோதிபிரகாஷ், சிபிஐ மாவட்ட செயலாளர் ஏ.பி.மணிகண்டன், சிபிஎம் மாவட்ட செயலாளர் கே.பிரபாகரன் மற்றும் விசிக, மதிமுக, காங்கிரஸ் உள்ளிட்ட பல்வேறு கட்சி நிர்வாகிகள், தொழிற்சங்கத்தினர் என 50க்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டு நல்லகண்ணுவின் திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினர்.

## 'ஓபிஎஸ் திமுகவில் இணைய இவர்கள்தான் காரணம்' சசிகலா வருத்தம்

சென்னை: பிப்.28-

"ஓபிஎஸ் திமுகவில் இணைந்ததற்கு தான் மட்டும்தான் அதிமுக என்று தம்பட்டம் அடித்துக்கொண்டு தனக்கு தானே தலைவராக அறிவித்துக் கொண்டவர்கள் தான் காரணம்" என சசிகலா தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில், "தமிழக முன்னாள் முதல்வரும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் மூத்த முன்னோடியும், சட்டமன்ற உறுப்பினருமான ஓ.பன்னீர்செல்வத்தின் இந்த முடிவு மிகவும் துரதிருஷ்டவசமானது.

தமிழகத்திலிருந்து அகற்றப்படவேண்டிய ஒரு தீய சக்தியாக திமுக விளங்கும் நிலையில், தாய்க் கழகம் என்று நினைத்துக் கொண்டு திமுகவில் தங்களை இணைத்துக்கொள்வது ஒரு தவறான முடிவாகத்தான் அமைந்துள்ளது.

ஆனால் இந்த நிலைமைகளுக்கெல்லாம் காரணம் ஒன்றே ஒன்றுதான். அவர் வேறு யாருமில்லை. தான் மட்டும்தான் அதிமுக என்று தம்பட்டம் அடித்துக்கொண்டு தனக்கு தானே தலைவராக அறிவித்துக் கொண்டவர்கள், தன்னை சுற்றியுள்ளவர்களையும் ஏமாற்றிக் கொண்டிருப்பவர்கள், திமுகவினரின் முழு கட்டுப்பாட்டில் இருந்து கொண்டு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் உள்ள அனைவரையும் வெளியேற்றி விட்டு எம்ஜிஆர் மற்றும் ஜெயலலிதாவின் கொள்கைகளுக்கு விரோதமாக தொடர்ந்து செயல்பட்டுவரும் துரோகிகளின் அழிவுகாலம் நெருங்கிவிட்டது.

இந்நிலையில் வரும் சட்டமன்றத் தேர்தலில் எனது தலைமையில் எம்ஜிஆரின் ரத்தத்தின் ரத்தங்களும், ஜெயலலிதா வழிவந்த சிங்கங்களும் எதிரிகளையும் துரோகிகளையும் வீழ்த்துவது உறுதி" எனத் தெரிவித்தார்.

## “பச்சிளம் குழந்தைக்குக் கூட பாதுகாப்பு இல்லாத திமுக அரசு...” தினகரன் விமர்சனம்



சென்னை, பிப்.28- 'கிருஷ்ணகிரி அருகே இரண்டரை வயதுக் குழந்தையை பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கி கொலை செய்த திமுக நிர்வாகி கைது செய்யப்பட்டுள்ளார். பச்சிளம் குழந்தைக்குக் கூட பாதுகாப்பில்லாத திமுக அரசை வரும் தேர்தலில் வீட்டுக்கு அனுப்புவது தான் ஒரே தீர்வு ' என அமமுக பொதுச்செயலாளர் டிடிவி தினகரன் தெரிவித்தார்.

இது குறித்து அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில், 'கிருஷ்ணகிரி மாவட்டம் அஞ்செட்டி அருகே இரண்டரை வயதுக் குழந்தையை பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கி கொலை செய்திருப்பதாக திமுகவின் இளைஞரணி நிர்வாகி ஒருவர் கைது செய்யப்பட்டிருப்பதாக ஊடகங்களில் வெளியாகியிருக்கும் செய்திகள் அதிர்ச்சியளிக்கின்றன.

பச்சிளம் குழந்தைகள், கல்லூரிக்குச் செல்லும் மாணவிகள், பணிக்குச் செல்லும் பெண்கள், வீட்டில் வசிக்கும் வயதான முதியவர்கள் என யாருக்குமே பாதுகாப்பற்ற மாநிலமாகத் தமிழகத்தை மாற்றிவிட்டு, பெண்களுக்குப் பாதுகாப்பான மாநிலம் எனப் பெருமை பேசுவதும், பல கோடி ரூபாய் செலவில் விளம்பரம் செய்வதும் வெட்கக் கேடானது.

கஞ்சா விற்பனையில் தொடங்கி கள்ளச்சாராயம் காய்ச்சுவது உள்ளிட்ட சட்டவிரோதச் செயல்களில் ஈடுபட்டுவந்த திமுக நிர்வாகிகளைக் கண்டும் காணாமல் அலட்சியமாக இருந்ததன் விளைவே, தற்போது அரங்கேறியிருக்கும் இந்த கொடூர சம்பவத்திற்கு அடிப்படை காரணம் எனப் பொதுமக்கள் மத்தியில் குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

எனவே, பச்சிளம் குழந்தை என்று பாராமல் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கி கொலை செய்த குரூர மனம் படைத்த திமுக நிர்வாகிக்கு உச்சபட்ச தண்டனை கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும் என வலியுறுத்தும் இந்நேரத்தில், தமிழகத்தில் அனைத்து தரப்பு மக்களும் நிம்மதியாக வாழ, வரும் தேர்தலில் திமுகவை நிரந்தரமாக வீட்டிற்கு அனுப்புவது தான் ஒரே தீர்வாக அமையும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்' எனத் தெரிவித்தார்

## உடல் உறுப்புகளை தானம் வழங்கிய கோவை சிறுமி வெண்பாவின் குடும்பத்துக்கு முதல்வர் நேரில் ஆறுதல்



கோவை, பிப்.28- மூளைச்சாவு அடைந்து உடல் உறுப்புகளை தானம் வழங்கிய கோவையை சேர்ந்த சிறுமி வெண்பாவின் இல்லத்துக்கு நேரில் சென்று அவரின் பெற்றோருக்கு முதல்வர் ஸ்டாலின் ஆறுதல் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட சமூக வலைதளப் பதிவில், 'உடலுறுப்புகளைக் கொடையளித்து இறவாப் புகழை எய்திவிட்ட குழந்தை வெண்பா நம் மனங்களில் நிறைந்து வாழ்வாள். பெற்றெடுத்த அன்பு மகளை இழந்த வலியையும் தாங்கிக் கொண்டு, மாந்தநேயத்தோடு அந்தக் குழந்தையின் உடலுறுப்புகளைக் கொடையளித்த பெற்றோர் சோமு மற்றும் சுகன்யா ஆகியோருக்கு நமது அன்பு ஆறுதலாய் துணை நிற்கட்டும்.சோமு நமது திராவிட முன்னேற்றக் கழகத்தில் நிர்வாகியாக இருந்து மக்களுக்குத் தொண்டாற்றுவதில் பெருமை கொள்கிறேன். உடலுறுப்புகளைக் கொடையளிப்புக் குறித்து நான் தொடர்ந்து விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகிறேன். அதேபோல், கொடையாளரின் இறுதி நிகழ்வுகள் அரசு மரியாதையுடன் நடைபெறும் எனக் கடந்த 23092023 அன்று அறிவித்திருந்தேன்.

இதனைத் தொடர்ந்து, தங்களது உடலுறுப்புகளைக் கொடையளிப்போரின் எண்ணிக்கை தமிழ்நாட்டு வரலாற்றிலேயே இல்லாத அளவிற்கு மட்டுமல்ல; இந்திய மாநிலங்களிலேயே அதிகளவுக்கு அதிகரித்து வருகிறது.இதுவரையில், இறப்பிலும் பலருக்கு வாழ்வளித்த 653 பேருக்கு அரசு மரியாதையுடன் இறுதி நிகழ்வுகள் நடைபெற்றுள்ளன. அறிவியல் மனப்பான்மையோடு சிந்தித்துச் செயல்படும் தமிழ்நாடு வளரட்டும். இறப்பிலும் புதுவாழ்வளிக்கும் இந்தக் கருணை உள்ளங்களே போற்றுதலுக்குரிய தியாகிகள்' எனத் தெரிவித்துள்ளார்.

## ஓபிஎஸ் பாஜகவில் சேராமல் திராவிட பாசறைக்கு வந்திருக்கிறார்: திருமாவளவன் வரவேற்பு



சென்னை, பிப்.28- ஓபிஎஸ் பாஜகவில் சேராமல் திராவிட பாசறைக்கு வந்திருக்கிறார். ஓபிஎஸ் திமுகவில் சேர்ந்திருப்பது திமுகவுக்கு மேலும் வலிமை சேர்த்திருக்கிறது என விசிக தலைவர் திருமாவளவன் தெரிவித்துள்ளார்.

முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் இன்று (பிப், 27) திமுகவில் இணைந்துள்ளார். அவரது மகன் ரவீந்திரநாத், உசிலம்பட்டி எம்எல்ஏ ஐயப்பன் உள்ளிட்ட அவரது ஆதரவாளர்களும் திமுகவில் இணைந்துள்ளனர். ஓபிஎஸ் திமுகவில் இணைந்துள்ளது அரசியல் களத்தில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. அதோடு, திமுக கூட்டணியில் உள்ள கட்சி தலைவர்கள் ஓபிஎஸ்ஸை வரவேற்று வருகின்றனர். அதேவேளையில், அதிமுக தலைவர்கள் அவரை கடுமையாக விமர்சித்து வருகின்றனர்.

இந்நிலையில், இது குறித்து திருமாவளவன் செய்தியாளர்களிடம் பேசும்போது, "வரும் 2ஆம் தேதி திமுகவுடன் தொகுதிப் பங்கீடு பேச்சுவார்த்தை நடைபெறும். ஓபிஎஸ் பாஜகவில் சேராமல் திராவிட பாசறைக்கு வந்திருக்கிறார். ஓபிஎஸ் திமுகவில் சேர்ந்திருப்பது திமுகவுக்கு மேலும் வலிமை சேர்த்திருக்கிறது. திமுகவில் இணைந்துள்ள ஓபிஎஸ்ஐ வரவேற்கிறேன்" என்று தெரிவித்துள்ளார்.

## ஈஸ்டர் தாக்குதல் வழக்கில் முன்னாள் அதிகாரி கைது: இலங்கை கத்தோலிக்க திருச்சபை வரவேற்பு

கொழும்பு, பிப்.28- இலங்கையில் கடந்த 2019 ஏப்ரல் 21ம் தேதி ஈஸ்டர் ஞாயிறு அன்று தேவாலயங்கள், நட்சத்திர ஓட்டல்களில் தற்கொலைப் படை தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் 11 இந்தியர்கள் உட்பட 270க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர்.

ஐஎஸ்ஐஎஸ் உடன் தொடர்புடைய உள்ளூரைச் சேர்ந்த தேசிய தவ்ஹீத் ஜமாத் என்ற தீவிரவாத அமைப்பு தாக்குதல் நடத்தியதாக தெரியவந்தது. இந்த வழக்கில் முன்னாள் உளவுத் துறை தலைவர் சுரேஷ் சாலே நேற்று முன் தினம் கைது செய்யப்பட்டார். ஈஸ்டர் தாக்குதல் நடந்தபோது சுரேஷ் சாலே வெளிநாட்டில் தூதரகப் பணியில் இருந்தார். 2015க்கு முன் மகிந்த ராஜபக்ச அரசில் உளவுத் துறை தலைவராக இருந்தார்.

இதுகுறித்து திருச்சபை செய்தித் தொடர்பாளர் சிரில் காமினி கூறுகையில், "கோத்த பய ராஜபக்ச ஆட்சியில் இந்த வழக்கு விசாரணை திட்டமிட்டு நிறுத்தப்பட்டது. தற்போதைய அரசின் முறையான விசாரணை காரண மாக கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. நம்பகமான ஆதாரங்களின் அடிப்படையில் சாலே கைது செய்யப்பட்டுள்ளதாக நம்புகிறோம்" என்று தெரிவித்தார்.

## “நான் ஊழல்வாதி அல்ல என்பது நிரூபணம் ஆனது!” தீர்ப்புக்குப் பின் கேஜ்ரிவால் கண்ணீர் பேட்டி



புதுடெல்லி, பிப்.28- ''நான் ஊழல்வாதி அல்ல. கேஜ்ரிவாலும் மணீஷ் சிசோடியாவும் முற்றிலும் நேர்மையானவர்கள் என்று நீதிமன்றம் கூறிவிட்டது'' என்று பத்திரிகையாளர்கள் முன்பு கதறியழுதபடி அரவிந்த் கேஜ்ரிவால் தெரிவித்தார்.

டெல்லி முன்னாள் முதல்வர் அரவிந்த் கேஜ்ரிவால், முன்னாள் கல்வி அமைச்சர் மணீஷ் சிசோடியா உள்ளிட்ட 23 பேரை, டெல்லி மதுபான கொள்கை வழக்கில் இருந்து டெல்லி ரோஸ் அவென்யூ நீதிமன்றம் இன்று விடுவித்தது.

இதையடுத்து நீதிமன்ற வளாகத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அரவிந்த் கேஜ்ரிவால், ''நான் ஊழல்வாதி அல்ல. கேஜ்ரிவாலும் மணீஷ் சிசோடியாவும் முற்றிலும் நேர்மையானவர்கள் என்று நீதிமன்றம் கூறியுள்ளது. இன்று இந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட அனைவரையும் நீதிமன்றம் விடுவித்துள்ளது. உண்மை வெற்றி பெறும் என்று நாங்கள் எப்போதும் கூறி வந்தோம். இந்திய சட்ட அமைப்பின் மீது எங்களுக்கு முழு நம்பிக்கை உள்ளது.

அமித் ஷாவும் மோடியும் சேர்ந்து ஆம் ஆத்மி கட்சியை ஒழித்துக்கட்ட மிகப் பெரிய சதித்திட்டத்தை தீட்டினார்கள். ஆம் ஆத்மி கட்சியின் 5 பெரிய தலைவர்களை சிறையில் அடைத்தார்கள். முதல்வர் பதவியில் இருந்த ஒருவர், வீட்டில் இருந்து வெளியே இழுத்துச் செல்லப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

ஒவ்வொரு செய்தி சேனலிலும் நாங்கள் ஊழல்வாதிகள் என்று அழைக்கப்பட்டோம். கேஜ்ரிவால் ஊழல்வாதி அல்ல. நான் என் வாழ்க்கையில் நேர்மையை மட்டுமே சம்பாதித்துள்ளேன். இன்று, கேஜ்ரிவாலும், மணீஷ் சிசோடியாவும், ஆம் ஆத்மி கட்சியும் நேர்மையானவர்கள் என்று நீதிமன்றம் கூறியுள்ளது. நமது அரசியலமைப்புச் சட்டத்தையும், அத்தகைய ஒரு அரசியலமைப்பை நமக்கு வழங்கிய பி.ஆர். அம்பேத்கரையும் நினைத்து நாங்கள் மீண்டும் பெருமைப்படுகிறோம். உண்மை மீண்டும் வென்றுள்ளது'' என தெரிவித்தார்.

இந்த செய்தியாளர் சந்திப்பின்போது கேஜ்ரிவால் பேச முடியாமல் நா தழுதழுக்க அழுதார். அருகில் இருந்த மணீஷ் சிசோடியா அவரை ஆறுதல் படுத்தினார்.

வழக்கின் பின்னணி: டெல்லியில் முந்தைய ஆம் ஆத்மி கட்சி ஆட்சியின்போது அரசு அறிமுகம் செய்த புதிய மதுபான கொள்கையில் (2022) முறைகேடு நடந்ததாக புகார் எழுந்தது. இது தொடர்பாக சிபிஐ, அமலாக்கத் துறை தனித்தனியாக வழக்கு பதிவு செய்து விசாரித்தது. இந்த வழக்கில் டெல்லியின் முன்னாள் முதல்வர் அரவிந்த் கேஜ்ரிவால், முன்னாள் துணை முதல்வர் மணிஷ் சிசோடியா ஆகியோர் கைது செய்யப்பட்டனர். பின்னர் அவர்கள் ஜாமீனில் வெளிவந்தனர்.

சிபிஐ விசாரித்த வழக்கில் இருந்து அவர்கள் இருவரும் இப்போது விடுவிக்கப்பட்டுள்ளனர். சுமார் நூறு கோடி ரூபாய் முறைகேடு நடந்து இருப்பதாக சிபிஐ குற்றப்பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டது. இந்த வழக்கில் வாதங்கள் முடிந்த நிலையில், டெல்லி நீதிமன்றம் இன்று தீர்ப்பு வழங்கியது. அதில் கேஜ்ரிவால், சிசோடியா மற்றும் இதில் தொடர்புள்ளதாக குற்றம் சாட்டப்பட்ட 21 பேரை விடுவித்தது. இந்தத் தீர்ப்பு டெல்லி அரசியல் வட்டாரத்தில் மிகுந்த கவனத்தைப் பெற்றுள்ளது.

## வாரணசியில் விவாகரத்து வழக்குகள் அதிகரிப்பு பின்புலம் என்ன?



புதுடெல்லி, பிப்.28- உத்தரப் பிரதேசம் மாநிலம் வாராணசியில் திருமணங்களை விட அதிகமான விவாகரத்துகள் செய்யப்படும் நிலை உருவாகி வருகிறது. இங்கு ஓர் ஆண்டில் 1500 திருமணங்கள் நடந்துள்ள நிலையில், நீதிமன்றத்தில் 2,250 விவாகரத்து வழக்குகள் பதிவாகி உள்ளது தெரியவந்துள்ளது.

இந்த வழக்குகளில் பெரும்பாலானவை திருமணமான மூன்று ஆண்டுகளுக்குள் நிகழ்கின்றன. மேலும், 15 ஆண்டுகள் ஒன்றாக வாழ்ந்த பிறகும், பல தம்பதிகள் பிரிந்து செல்வதற்காக மனுக்களைத் தாக்கல் செய்கின்றனர். இதன் பொருள், திருமண உறவுகளின் கணிதம் தலைகீழாக மாறியுள்ளது. குறைவான திருமணங்களும் அதைவிட அதிகமானப் பிரிவுகளும் ஏற்படுகின்றன.

வாராணசியின் குடும்ப நீதிமன்றத்தில் சராசரியாக, தினமும் 188 விண்ணப்பங்களும், ஆறு வழக்குகளும் ஒருவருக்கொருவர் பிரிந்து செல்வதற்காக நீதிமன்றத்தை அடைகின்றன. கடந்த ஒரு வருடத்தில் 833 வழக்குகளிலும் விவாகரத்துக்கான உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

இது குறித்து வாராணசி குடும்ப நீதிமன்ற மூத்த வழக்கறிஞரான பரத் சிங் கூறுகையில், 'திருமணமான முதல் மூன்று ஆண்டுகள் மிகவும் முக்கியமாக உள்ளன. இந்தக் காலகட்டத்தில்தான் அதிக எண்ணிக்கையிலான விவாகரத்து வழக்குகள் நிகழ்கின்றன.

பல சந்தர்ப்பங்களில், திருமணமான சில மாதங்களுக்குள் தகராறுகள் நீதிமன்றத்திற்கு வருகின்றன. திருமணமான 15 ஆண்டுகளுக்குப் பிறகும் பல தம்பதிகள் பிரிவதற்கு விண்ணப்பிப்பதும் ஆச்சர்யமாக இருக்கிறது' எனத் தெரிவித்தார் .

வாராணசியின் குடும்ப நீதிமன்றத்தில் கணவன் மனைவி இடையேயான விவாகரத்து வழக்குகளில் பெரும்பாலானவை திருமணமான மூன்று ஆண்டுகளுக்குள் உள்ளன. இந்த வழக்குகளில் பெரும்பாலும் 25 முதல் 30 வயதுக்குட்பட்ட பெண்கள் மற்றும் ஆண்கள் சம்பந்தப்பட்டுள்ளனர்.

இந்தப் போக்குக்கு பின்னால் ஐந்து முக்கிய காரணங்கள் இருப்பதாக கருதப்படுகிறது. பெரும்பாலான வழக்குகளில் மறைக்கப்பட்ட திருமணங்கள், ஒருவரின் வேலை அல்லது குடும்ப நிலை பற்றிய துல்லியமான தகவல்களை வழங்கத் தவறியது உள்ளது. முந்தைய காதல் விவகாரங்கள், திருமணத்திற்குப் பிறகு கடந்த கால உறவுகளை வெளிப்படுத்துதல் மற்றும் அடுத்தடுத்த தகராறுகள் ஆகியவையும் இடம்பெறுகின்றன.

ஆண்கள் மீது வரதட்சிணை துன்புறுத்தல் உள்ளிட்ட வழக்குகள், திருமணத்திற்குப் புறம்பான விவகாரங்கள் மற்றும் போதைப்பொருள் அடிமைத்தனம் போன்ற குற்றச்சாட்டுகள் எழுகின்றன.

சில வழக்குகளில் ஆண்மைக் குறைவு அடங்கும். குடும்ப நீதிமன்றம் ஆரம்பத்தில் ஆலோசனையைப் பயன்படுத்துகிறது. பல சந்தர்ப்பங்களில் சமரசம் அடையப்பட்டாலும், கணிசமான எண்ணிக்கையிலான தம்பதிகள் சமரசத்தை எட்ட முடியாத நிலை தொடர்கிறது.



## “ஓபிஎஸ் வருகை திமுக வெற்றிக்கு மிகப்பெரிய பாதகம்!” தமிழிசை

சென்னை, பிப்.28- 'ஓபிஎஸ் போன்றவர்களை சேர்த்துக்கொண்டு அவர்கள் தான் திமுகவிற்கு மிகப்பெரிய பலம் என்று ஸ்டாலின் சொல்கிறார் என்றால் திமுகவின் பரிதாப நிலையை தான் எண்ண வேண்டி இருக்கிறது. ஓபிஎஸ் திமுகவில் சேர்ந்தது திமுக வெற்றிக்கு மிகப்பெரிய பாதகமாக அமையும்' என பாஜக மூத்த தலைவர் தமிழிசை சவுந்தரராஜன் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில், "வரும் சட்டப்பேரவைத் தேர்தலில் நிச்சயமாக திராவிட முன்னேற்ற கழகம் தோல்வியை சந்திக்கப் போகிறது என்பது இன்று காலை உறுதி செய்யப்பட்டு இருக்கிறது. தனிப்பட்ட முறையில் ஓபிஎஸ் மீது எவ்வளவு மரியாதை இருந்தாலும், தனது வாயால் மீண்டும் திராவிட முன்னேற்ற கழகம் ஆட்சிக்கு வர வேண்டும் என்று சொன்னது மட்டுமல்லாமல் தாய் கழகத்துக்கு வந்ததைப் போல உணர்கிறேன் என்று சொன்னது தாய்மையை கொச்சைப்படுத்துவதாக தான் நான் எடுத்துக் கொள்கிறேன்.

ஜெயலலிதா தன் வாழ்நாள் முழுவதும் எந்த கட்சியை எதிர்த்தாரோ, எந்த கட்சி ஒரு பெண் என்றும் பாராமல் அவரை சட்டமன்றத்தில் மிக மோசமாக நடத்தினார்களோ அந்த கட்சிக்கு சென்று தன்னை இணைத்துக் கொண்டது மட்டுமல்லாமல் தாய் கழகம் இணைந்ததைப் போல உணர்கிறேன் என்று சொன்னால் அது தமிழகத்தில் உள்ள யாரும் ஒத்துக் கொள்ள மாட்டார்கள்.

இன்னும் சொல்லப்போனால் திமுக எந்த அளவில் தோல்வி பயத்தில் இருக்கிறது என்றால், இவர்களைப் போன்றவர்களை சேர்த்துக்கொண்டு அவர்கள் தான் திமுகவிற்கு மிகப்பெரிய பலம் என்று ஸ்டாலின் சொல்கிறார் என்றால் திமுகவின் பரிதாப நிலையை தான் எண்ண வேண்டி இருக்கிறது. ஓபிஎஸ் திமுகவின் சேர்க்கை திமுக வெற்றிக்கு மிகப்பெரிய பாதகமாக அமையும்" எனத் தெரிவித்துள்ளார்.

## “ஓபிஎஸ்... சுயநலத்தின் மொத்த உருவம்!” கே.பி.முனுசாமி காட்டம்



கிருஷ்ணகிரி, பிப்.28- சுயநலத்தின் மொத்த உருவமாக உள்ள ஓபிஎஸ், திமுகவில் இணைந்தது வெட்கக்கேடானது என அதிமுக துணை பொதுச் செயலாளர் கே.பி.முனுசாமி எம்எல்ஏ தெரிவித்தார்.

முன்னாள் முதல்வர் ஜெயலலிதா பிறந்தநாளையொட்டி, கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனையில் கடந்த 24ம் தேதி பிறந்த குழந்தைகளுக்கு தங்க மோதிரங்கள் வழங்கும் நிகழ்ச்சி நடந்தது. இதில் பங்கேற்ற அக்கட்சியின் துணை பொதுச் செயலாளர் கே.பி.முனுசாமி எம்எல்ஏ பின்னர் செய்தியாளர்களிடம் கூறியது: "அதிமுக ஆட்சியில் 3 முறை முதல்வராக இருந்தவர் ஓ.பன்னீர்செல்வம். அந்த இயக்கத்தில் இருந்து தனக்கென அடையாளத்தை காட்டியவர்.

ஆனால், இன்றோ அதிமுக எதனால் உருவானதோ, இந்த இயக்கத்தின் தலைவர் எம்ஜிஆர் யாரை தீயசக்தி என கூறினாரோ, அவர்களிடம் ஓபிஎஸ் சேர்ந்துள்ளார். இது ஒரு வெட்கக்கேடான விஷயம். அவரை மனிதராக பார்ப்பதற்கே வெட்கமாக உள்ளது. ஓபிஎஸ் 3 முறை முதல்வராக இருந்தது கசப்பான நினைவா? சுயநலத்தின் மொத்த உருவம் அவர். கட்சியில் இருந்து நீக்கப்பட்டவர்கள் மன்னிப்புக் கடிதம் கொடுத்து தன்னை கட்சியில் சேர்த்துக் கொள்ளுங்கள் என கேட்க வேண்டும். அதுதான் அதிமுகவின் நடைமுறை.

கிருஷ்ணகிரி நிகழ்வு கட்சியை களங்கப்படுத்த நினைக்கும் ஓபிஎஸ்ஸை வெளியேற்றவேண்டும் என தொண்டர்கள் தீர்மானம் நிறைவேற்றி அதன் மூலம் வெளியேற்றப்பட்டவர். இணைப்பு என கூறிக் கொண்டு கட்சி தொண்டர்கள், மக்களை மட்டுமல்ல, தன்னையும் அவர் ஏமாற்றிக் கொண்டார்.

ஜெயலலிதா மறைவுக்குப் பின் முதல்வராக இருந்த ஓ.பன்னீர்செல்வத்திடம், சசிகலா ஏன் ராஜினாமா கடிதத்தை வாங்கினார்? ஜெயலலிதா போல் தன்னை உருவகப்படுத்திக் கொண்டு அவரது காரில் பவனி வந்து தன்னை முதல்வராக்கிக்கொள்ள எல்லா பணிகளையும் செய்தார். ஆனால், தர்மம் அதை விடுமா? சசிகலாவை எதிர்த்துதான் ஓபிஎஸ் தர்மயுத்தம் நடத்தினார்.

ஜெயலலிதா இறப்பில் மர்மம் இருக்கிறது. அதற்கு நீதி விசாரணை வேண்டும் என மேடைகளில் பேசினார். ஆனால், திடீரென சசிகலாவை சேர்க்க வேண்டும் என கோரிக்கை வைக்கிறார். யாரை இந்த இயக்கத்தில் இணைக்கக் கூடாது என கூறினோமோ, அவர்களையே இந்த இயக்கத்தில் சேர்க்க வேண்டும் என முயற்சி செய்பவர்களை எப்படி கட்சியில் சேர்த்துக் கொள்ள முடியும்?

பழனிசாமி ஒரு தீர்க்கதரிசி. இவர்கள் எல்லாம் மிகப் பெரிய சந்தர்ப்பவாதி என அவர் மனதில் பட்டுள்ளது. அதனால் எத்தனையோ வழக்குகள் போட்டாலும், அதனை எதிர்கொண்டார். எந்தச் சூழ்நிலையிலும், அவர்களை கட்சியில் சேர்க்க வேண்டும் என்கிற சிந்தனை ஒருமுறை கூட அவருக்கு வரவில்லை.

அதிமுக பிளவுபட்டதாக மாயத் தோற்றத்தை உருவாக்க முயற்சி செய்தார்கள். ஆனால், அவர்கள் பின் யாரும் செல்லவில்லை" என்று அவர் தெரிவித்தார்.

# லக்னோ பல்கலை. வளாகத்தில் மசூதி மூடப்பட்ட விவகாரம்: மாணவர்கள் இடையே மோதல் அபாயம்

புதுடெல்லி, பிப்.28-

உத்தர பிரதேச தலைநகர் லக்னோவில், லக்னோ பல்கலைக் கழகம் செயல்படுகிறது. இதனுள் நசிருதீன் ஹைதர் என்பவரால் 1,800ம் ஆண்டு டு கட்டப்பட்டதால் பாரா தாரி எனும் கட்டிடம் உள் ளது. இதனை மசூதி யாக கருதி பல்கலைக் கழக முஸ்லிம் மாணவர் கள் இதனுள் தொழுகை நடத்தி வருகின்றனர்.

இக்கட்டிடம் இடி யும் நிலையில் இருப்ப தாக கூறி கடந்த பிப்ர வரி 23ல் லக்னோ மாநக ராட்சியால் முடப்பட் டது. அதே பல்கலையில் உள்ள மற்றொரு மசூதி யில் தொழுகை நடத்திக் கொள்ளும்படி அறிவுறுத் தப்பட்டது. இதை எதிர்த்து முஸ்லிம் மாணவர்கள் பல்கலை வளாகத்தில் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

தடையை மீறி தொழுகை நடத்திய 13 மாணவர்கள் மீது பொது அமைதிக்கு பங்கம் விளை




வித்ததாக வழக்குப் பதி வானது. இதனால் முஸ் லிம் மாணவர்கள் மறுநாள் போராட்டத்தை வலுப்படுத் தினர். இவர்களுக்கு எதி ராக பல்கலை.யின் பஜ்ரங் தளம் உள்ளிட்ட இந்துத் துவா ஆதரவு மாணவர் கள் போராட்டக் குரல் எழுப்பினர். இதனால் இரு தரப்பு மாணவர்கள் இடையே மோதல் சூழல் உருவானது. மூன்றாவது நாளான நேற்று, மீண்டும் மூடப்பட்ட மசூதியின் தடுப் புகளை மீறி தொழுகை நடத்தப்பட்டது. இதற்கு சமாஜ்வாதி, காங்கிரஸ் மற்றும் இடதுசாரிகளின் மாணவர் அமைப்புகளை சேர்ந்தவர்கள் மனித சங் கிலி அரண் அமைத்து பாதுகாப்பு அளித்தனர்.

இதனால், லக்னோ பல்கலை வளாகத்தில் பதற்றம் அதிகரித்து வரு கிறது. வளாகத்தின் உள் ளேயும் வெளியேயும் பாது காப்பு அதிகரிக்கப்பட் டுள்ளது. நிலைமையை போலீஸார் தொடர்ந்து கண்காணித்து வருகின் றனர். மசூதி மூடலுக்கு எதிரான மாணவர்களின் போராட்டத்துக்கு லக்னோ அரசியல் தலைவர்களும் ஆதரவளிக்க தொடங்கி யுள்ளனர்.

# உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட ராணுவ ஹெலிகாப்டரில் பாக். எல்லை அருகே பறந்த குடியரசு தலைவர் முர்மு

ஜெய்சால்மர், பிப்.28-

உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட ராணுவ ஹெலிகாப்டரான எல்சிஎச் 'பிரசாந்த்'ல் இந்திய பாகிஸ்தான் எல்லை அருகே குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு பயணித்தார். தற்சார்பு பாரதத்தின் சக்திவாய்ந்த சின்னம் 'பிரசாந்த்' என்று அவர் மகிழ்ச்சி தெரி வித்துள்ளார்.

குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு இன்று ராஜஸ்தான் மாநிலம் ஜெய்சால்மரில் உள்ள விமானப் படைத் தளத்தில், உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பட்ட இலகு ரக போர் ஹெலிகாப்டர் பிரச்சாந்தில் பயணம் மேற்கொண்டார். குரூப் கேப்டன் நயான் சாந்திலால் பஹுவாவுடன் அவர் ஹெலிகாப்டரில் பயணம் மேற்கொண்டார்.

இந்திய விமானப் படைத் தளபதி ஏ.பி.சிங் மற்றும் கமாண்டர் கேப்டன் ஏ.மகேந்திரா ஆகியோர் மற்றொரு ஹெலிகாப்டரில் அவருடன் பயணம் மேற்கொண்டனர். சுமார் 25 நிமிடப் பயணத்தின்போது காடிசர் ஏரி மற்றும்



ஜெய்சால்மர் கோட்டை மீது ஹெலிகாப்டரில் பறந்து சென்று பீரங்கி இருந்த இலக்கை நோக்கி தாக்குதல் நடத்தினர்.

இதனையடுத்து இந்தப் பயணம் குறித்து பார்வையாளர் புத்தகத்தில் குடியரசுத்தலைவர் திரவுபதி முர்மு எழுதிய குறிப்பில், ''உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பட்டு உருவாக்கப்பட்ட இலகு ரக போர் ஹெலிகாப்டர் "பிரசாந்த்"ல் பறந்து சென்றது சிறந்த அனுபவத்தை அளித்தது. இந்தப் பயணம் நாட்டின் பாதுகாப்புத் திறன் மீது ஒரு புதிய பெருமையை ஏற்படுத்தியுள்ளது. இந்தப் பயணத்தை சிறப்பான முறையில் ஏற்பாடு செய்த இந்திய விமானப் படை மற்றும் ஜெய்சால்மர் விமானப் படைத் தளத்தின் குழுவுக்கு வாழ்த்துகள்'' என தெரிவித்துள்ளார்.

இந்தப் பயணம் தொடர்பாக குடியரசுத் தலைவரின் சமூக ஊடக பக்கத்தில் வெளி யிடப்பட்டுள்ள பதிவுகளில், ''பிரசாந்த் ஹெலிகாப்டர் தன்னம்பிக்கையின் சின்னம். நான் தற்போது புகழ்பெற்ற ஜெய்சல்மார் கோட்டையின் மீது பறந்து கொண்டிருக்கிறேன். நமது நாட்டின் துணிச்சலான விமான வீரர்களால் நான் மிகவும் பெருமை கொள்கிறேன். எல்சிஎச் பிரசாந்த் தற்சார்பு பாரதத்தின் சக்திவாய்ந்த சின்னம்'' என்று அவர் தெரிவித்துள்ளார்.

# விவசாயி கொலை வழக்கில் திமுக முன்னாள் எம்எல்ஏவுக்கு ஆயுள் சிறை

செய்யாறு, பிப்.28-

விவசாயி கொலை வழக்கில் திமுக முன்னாள் எம்எல்ஏ கமலக்கண்ணன் உட்பட 7 பேருக்கு ஆயுள் சிறை தண்டனை விதிக் கப்பட்டது. திருவண்ணா மலை மாவட்டம் செய்யாறு வட்டம் பெரியசெங்காடு கிராமத்தைச் சேர்ந்தவர் விவசாயி முனுசாமி(48).

இவருக்கும், அதே பகுதியைச் சேர்ந்த பெருமாள், இருசப்பன் ஆகியோருக்கும் இடையே நிலம் தொடர்பான முன் விரோதம் இருந்துள்ளது. இந்நிலையில், 2014 மே 17ம் தேதி இவர்களிடையே நிலம் தொடர்பாக மீண்டும் பிரச்சினை ஏற்பட்டுள்ளது.

அப்போது, பெருமாள், இருசப்பனுக்கு ஆதரவாக செங்காடு கிராமத்தைச் சேர்ந்த மதியழகன்(35), நந்தகோபால்(29), சுதாகர் (35), துரைமுருகன்(39) மற் றும் வந்த வாசி திமுக முன்னாள் எம்எல்ஏ கமலக் கண்ணன் ஆகியோரும் சேர்ந்து, முனுசாமியுடன் தகராறில் ஈடுபட்டுள்ளனர்.

அவர்களிடையே ஏற் பட்ட வாக்குவாதம் மோதலாக மாறியது. இதில், முனுசாமி, அவரது மனைவி பொன்



னி, உறவினர் அஞ் சலி ஆகியோரை, பெரு மாள், இருசப்பன் மற்றும் அவரது ஆதரவாளர்கள் 7 பேர் சேர்ந்து கத்தி உள் ளிட்டவற்றால் தாக்கியுள் ளனர்.

இதில் பலத்த காயமடைந்த முனுசாமி செய்யாறு அரசு மருத்து வமனையில் சேர்க்கப்பட் டார். பின்னர், மேல்சிகிச் சைக்காக சென்னை அரசு மருத்துவமனையில் அனு மதிக் கப்பட்ட முனுசாமி, அங்கு சிகிச்சை பலனின்றி உயிர் இழந்தார்.

இதுகுறித்து அனக் காவூர் போலீஸார் விசா ரணை நடத்தி, மதியழகன், நந்தகோபால், இருசப்பன், பெருமாள், சுதாகர், துரை முருகன், முன்னாள் எம் எல்ஏ கமலக்கண்ணன் ஆகியோரைக் கைது செய் தனர்.

இந்த வழக்கு திரு வண்ணாமலை மாவட் ட முதன்மை அமர்வு நீதி மன்றத்தில் நடைபெற்றது. இந்த வழக்கை விசாரித்த நீதிபதி ப.மதுசூதனன், குற் றம் சுமத்தப்பட்ட முன் னாள் எம்எல்ஏகமலக்கண் ணன் மற்றும் பெருமாள், இருசப்பன், மதியழகன், நந்தகோபால், சுதாகர், துரைமுருகன் ஆகியோ ருக்கு ஆயுள் சிறை தண் டனை விதித்து நேற்று தீர்ப் பளித்தார்.

2009ல் நடைபெற்ற சட் டப்பேரவை இடைத்தேர் தலில் கமலக்கண்ணன் திமுக சார்பில் போட்டி யிட்டு வெற்றி பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# வெற்றிக் கணக்கை தொடங்குமா நாம் தமிழர் கட்சி? சீமான் வியூகமும், களச் சூழலும்

சென்னை, பிப்.28-

இந்த முறையும் தனித்துப் போட்டி என முடிவெடுத்து முதல் ஆளாக 234 தொகுதிகளுக்கும் வேட்பாளர்களை அறி வித்துவிட்டார் சீமான். நாம் தமிழர் கட்சி இம்முறையாவது சட்டப்பேரவைக்குள் நுழையுமா என்பதுதான் தற்போதைய கேள்வியாக உள்ளது.

தமிழகத்தில் 'தமிழ்த் தேசியம்' என்ற தனித்த அடையாளத்தோடு தொடர்ந்து களம் கண்டு வருகிறது நாம் தமிழர் கட்சி. 2010 முதல் அரசியலில் இருந்தாலும், வாக்கு அரசியலில் நாதக 2016ல் அடியெடுத்து வைத்தது. முதல் தேர்தலிலேயே 1.1 சதவீத வாக்குகளைப் பெற்று கவனம் ஈர்த்தது அந்தக் கட்சி. தொடர்ந்து 2019 மக்களவைத் தேர்தல், 2021 சட்டப்பேரவைத் தேர்தல்களில் 4% மற்றும் 6% என படிப்படியாக நாம் தமிழரின் வாக்கு வங்கி உயர்ந்தது. 2024 மக்களவைத் தேர்தலில் 8.2 சதவீத வாக்குகளைப் பெற்று அங்கீகரிக்கப்பட்ட மாநிலக் கட்சியாக மாறியது நாம் தமிழர் கட்சி.

அரசியல் பின்புலம், பெரிய பொருள் வசதி, சினிமா பின்புலம் என எந்த ஆற்றலும் இன்றி 10 ஆண்டுகளில் நாம் தமிழர் கட்சியின் பாய்ச்சல் நிச்சயமாக கவனிக்க வேண்டியது. இந்த 10



ஆண்டுகளில் எண்ணற்ற சர்ச்சைகள், வழக்குகள், முக்கிய நிர்வாகிகளின் விலகல் என பல கட்ட சோதனைகளையும் தனியொரு ஆளாக சமாளித்து இம்முறையும் துணிந்து தனித்தே நிற்கிறார் சீமான்.

தமிழகத்தில் இதுவரை தேசிய கட்சிகள், திராவிட கட்சிகள்தான் கோலோச்சி வருகிறது. ஆனால், இவ்விரு கட்சிகளையும் கடுமையாக சாடி 'தமிழ்த் தேசியம்' பேசும் கட்சியாக வளர்ந்துள்ளது நாதக. பெரியார் பெயரை ஒப்புக்காவது சொல்லாத கட்சிகள் இங்கு இல்லை. ஆனால், பெரியாரை மிகக் கடுமையாக விமர்சித்தும், அதே ஈரோடு கிழக்கில் சுமார் 16 சதவீதம் வாக்குகளை வாங்கினார் சீமான். தமிழக அரசியலில் முக்கிய போட்டியாளராக தற்போது விஜய் நுழைந்துள்ள நிலையில், நாம் தமிழர் கட்சி இந்தத் தேர்தலில் என்ன செய்யப் போகிறது என்று பார்ப்போம்...

வெற்றிக் கணக்கை தொடங்குவாரா சீமான்?

2016 முதல் படிப்படியாக வாக்கு வங்கியை உயர்த்தினாலும், நாம் தமிழர் கட்சியால் இதுவரை ஒரு இடத்திலும் வெற்றிபெற முடியவில்லை. குறைந்தபட்சம் சீமான் நிற்கும் தொகுதியில் கூட இதுவரை வெற்றி வசமாகவில்லை என்பதுதான் கள நிலவரம். இந்த முறை விஜய்யும் களத்துக்கு வந்துள்ளதால், நாம் தமிழர் கட்சி நெருக்கடியில் இருப்பது கண்கூடு.

விஜயகாந்துக்குப் பின்னர் தமிழகத்தில் வலுவான மூன்றாவது பெரிய ஆளுமை யாரும் இல்லாத சூழல் இருந்தது. அந்த இடத்தை சீமான் நிரப்பி வந்தார். எனவேதான், திமுக, அதிமுகவை விரும்பாத வாக்காளர்களின் முக்கிய தேர்வாக நாம் தமிழர் கட்சி இருந்தது. ஆனால், இம்முறை மாற்றத்தை விரும்பும் வாக்காளர்களுக்கு விஜய் என்னும் இன்னொரு தேர்வும் உள்ளது. எனவே, இம்முறை இவர்களின் ஆதரவை இருவரில் யார் கூடுதலாக பெறுவார் என்பதே எதிர்பார்ப்பு.

சரிபாதி தொகுதிகளில் பெண்களுக்கு வாய்ப்பு, எளிய மக்களுக்கு வாய்ப்பு, பிராமணர்கள் முதல் பிறமொழி யினர் வரை அனைத்து சமூகங்களுக்கும் வாய்ப்பு, சூழலியல் சிக்கல்களை முன்வைத்து பிரச்சாரம், கொள்கைகளை முன்வைத்த அரசியல் என சமீபத்தில் சீமான் நடத்திய 'மாற்றத்தை விரும்பும் மக்களின் மாநாடு' பெரும் பேசுபொருளானது. எவ்வித எதிர்பார்ப்பும் அற்று, கைக்காசை போட்டு இந்த மாநாட்டுக்கு கூடிய கூட்டம் லட்சத்தை தாண்டியது மற்ற கட்சிகளின் கவனத்தை ஈர்த்தது.

கூட்டம் கூடுகிறது, கொள்கை இருக்கிறது, நட்சத்திர பேச்சாளர்கள் சொல்மழை பொழிகின்றனர், சீமானின் எழுச்சிமிகு பேச்சு இருக்கிறது என்பதெல்லாம் நாதகவின் பலம். ஆனால், இம்முறை நிச்சயம் சில தொகுதிகளிலாவது வெற்றிபெற வேண்டும் என அக்கட்சியின் தொண்டர்கள் ஆழமாக நம்புகின்றனர். அதற்கேற்ப வியூகம் சீமானிடம் உள்ளதா?

சீமான் இம்முறை தன் சொந்த தொகுதியான காரைக்குடியில் போட்டி யிடுகிறார். இந்த தொகுதியில் திமுக, அதிமுக நேரடியாக களமிறங்காது என்பது பிளஸ். பாஜக, காங்கிரஸ், தவெக என மும்முனைப் போட்டியை சீமான் எதிர்கொள்ள வேண்டும். அதனையும் தாண்டி சீமான் வெற்றிபெற சில வாய்ப்புகள் கண்முன்னே தெரிகிறது. முதல்முறையாக சீமானை சட்டப்பேரவைக்கு அனுப்பலாமா என்பதை காரைக்குடி மக்கள்தான் முடிவு செய்ய வேண்டும்.

காரைக்குடியைப் போல தென் தமிழகத்தில் தேசிய கட்சிகளின் ஆதிக்கம் நிறைந்த சில தொகுதிகளில் நாதகவின் பலம் அதிகமாக உள்ளது. அங்கே தவெகவும் வாக்குகளைப் பிரிப்பதால் தங்களால் சில தொகுதிகளை வெல்ல முடியும் என்று சீமான் கணக்குப் போடுகிறார். அதேபோல, மற்ற கட்சிகளையெல்லாம் தாண்டி நாதகவினர் விஜய்யை ரவுண்டு கட்டி விமர்சித்து வருகின்றனர். எனவே விஜய்யின் தாக்கத்தை சமாளித்து, குறைந்த பட்சம் இம்முறை 8.2% வாக்குகளையாவது நாதக தக்கவைக்க வேண்டும். அதனையும் மனதில் வைத்தே சீமான் தேர்தல் வியூகங்களை வகுத்து வருகிறார்.

இப்போதைய சூழலில், திமுக அதிமுக பிரதான போட்டி என மாறி நிற்கிறது. அடுத்தடுத்த இடங்களை பிடிக்க தவெக ஒரு நாதக மல்லுக்கட்டுகிறது என்கின்றனர் அரசியல் விமர்சகர்கள். இந்த தேர்தல் நாதகவுக்கு மிகப் பெரிய அக்னிப் பரீட்சைதான், அதில் சீமான் வெல்வாரா என்று பொறுத்திருந்து பார்ப்போம்.

# கடற்கரை தாம்பரம் இடையே சிறப்பு இலவச பேருந்து

சென்னை, பிப்.28-

எழும்பூர் ரயில் நிலை யத்தில் நடைபெறும் மறுசீரமைப்பு பணி காரண மாக, கடற்கரை செங் கல்பட்டு தடத்தில் மின் சார ரயில்களின் சேவை யில் மாற்றம் செய்யப்பட் டுள்ளது.

இதையடுத்து பயணி களின் வசதிக்காக, ரயில் டிக்கெட், சீசன் டிக்கெட் வைத்திருக்கும் பயணி களுக்காக, தாம்பரம் ரயில் நிலையத்திலிருந்து கடற் கரைக்கும், கடற்கரையி லிருந்து தாம்பரத்துக்கும் தலா 20 சிறப்பு இலவச பேருந்துகள் இயக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந் தது. இந்த சிறப்பு இலவச பேருந்துகளின் சேவையை ரயில்வே நேற்று தொடங் கியது.

இதுகுறித்து, சென்னை ரயில்வே கோட்ட அதிகாரி கள் கூறியதாவது: இந்த பேருந்துகள் தடையின்றி




செயல்படவும், அனைத்து முக்கிய வழித்தடங்களில் பயணிகளுக்கு வழிகாட் டும் விதமாகவும் ரயில் டிக்கெட் பரிசோதகர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் மின்சார ரயில் டிக்கெட், மாதாந்திர சீசன் டிக்கெட் வைத்திருப் பவர்களை பரிசோதிப் பார்கள். இந்த பேருந்து சேவை அலுவலக நேரங் களில் காலை 6.40 மணி முதல் 9.40 வரை, மாலை 5 மணிமுதல் இரவு 8 மணி வரை, 7 நிமிட இடைவெளி யில் இயக்கப்படும்.

இந்த பேருந்துகள் தாம்பரத்திலிருந்து புறப் பட்டு கிண்டி, அண்ணா சாலை, சேப்பாக்கம், தலைமைச் செயலகம் வழியாக இயக்கப்பட உள் ளன.

சில பேருந்துகள் கடற் கரையிலிருந்து தி.நகர், எழும்பூர், சென்ட்ரல் வழி யாக இயக்கப்படவுள்ளன என்று கூறினர்.

# கோயில் காவலாளி அஜித்குமார் வழக்கில் டிஎஸ்பி தலைமறைவு: விசாரணை தள்ளிவைப்பு

மதுரை, பிப்.28-

சிவகங்கை மாவட்டம் மடப்புரம் பத்ரகாளியம்மன் கோயில் காவலாளி அஜித் குமார், கடந்த ஆண்டு ஜூன் 27ல் நகை திருட்டு வழக்கு விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட் டு, தனிப்படைக் காவலர் களால் தாக்கப்பட்டதில் உயிரிழந்தார்.

இந்த வழக்கில் தனிப் படைக் காவலர்கள் 7 பேரை சிபிஐ அதிகாரி கள் கைது செய்தனர். காவல் மரணம் நிகழ்ந் தபோது மானாமதுரை டிஎஸ்பியாக இருந்த சண் முகசுந்தரம், திருப்புவனம் காவல் நிலைய ஆய்வாளர் ரமேஷ்குமார், உதவி ஆய் வாளர் சிவக்குமார், தலை மைக் காவலர் இளைய ராஜா ஆகியோர் எதிரி களாகச் சேர்க்கப்பட்டனர்.

சண்முகசுந்தரம் உட்பட 4 பேரும் ஆஜராகு மாறு மதுரை மாவட்ட நீதி



மன்றம் உத்தரவிட்டிருந் தது. இந்த வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு வந்தபோது, டிஎஸ்பி சண் முக சுந்தரம் ஆஜராக வில்லை.இதையடுத்து, சண்முகசுந்தரத்துக்கு எதி ராக ஜாமீனில் வெளிவர முடியாத பிடிவாரன்ட் பிறப் பித்தும், அவரைக் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த சிபிஐக்கு உத்தரவிட்டும், விசா ரணையை பிப். 26க்கு நீதிபதி தள்ளிவைத்தார்.

இவ்வழக்கு தலைமைக் குற்றவியல் நீதித்துறை நடுவர் செல்வபாண்டி முன்னிலையில் நேற்று விசாரணைக்கு வந்தது. ரமேஷ்குமார், சிவக்குமார், இளையராஜா ஆகியோர் ஆஜராகினர். ஆனால், டிஎஸ்பி சண்முகசுந்தரம் ஆஜராகவில்லை.பின்னர் விசாரணை மார்ச் 5ம் தேதிக்கு தள்ளிவைக்கப் பட்டது. தலைமறைவான சண்முகசுந்தரம் உச்ச நீதி மன்றத்தில் முன்ஜாமீன் பெறும் முயற்சியில் ஈடுபட் டுள்ளதாக காவல் துறை வட்டாரம் தெரிவித்துள்ளது.

# தனியார் நிறுவன ஊழியர் கொலை வழக்கில் 6 பேருக்கு ஆயுள் சிறை தண்டனை

கோவை, பிப்.28-

தனியார் நிறுவன ஊழியரை அடித்துக் கொன்ற 6 பேருக்கு ஆயுள் தண்டனை விதித்து கோவை நீதி மன்றம் தீர்ப்பளித்துள்ளது. கோவை மாவட்டம் பொள் ளாச்சி அருகே உள்ள வடுகபாளையத்தைச் சேர்ந் தவர் ஆனந்த்(45).

இவர் சிங்காநல்லூரில் உள்ள மெத்தை தயாரிப்பு நிறுவனத்தில் மேற்பார்வையாளராகப் பணியாற்றி வந் தார். 2018 நவம்பர் 5ம் தேதி ஏடிஎஸ்சி சாலையில் உள்ள மதுபானக் கூடத்துக்கு ஆனந்த் மது அருந்தச் சென்றார்.

அப்போது ஆனந்துக்கும், அருகே மது அருந்திக் கொண்டிருந்த சதீஷ்குமார் என்பவருக்கும் தகராறு ஏற் பட்டுள்ளது. இதனால் ஆத்திரமடைந்த சதீஷ்குமார், தன் நண்பர்கள் வின்சென்ட், சிவமூர்த்தி, ஜெயக்கு மார், விவின் தாஸ், கார்த்திக் மற்றும் ஒரு சிறுவன் ஆகியோருடன் சேர்ந்து ஆனந்தை சுற்றி வளைத்து சரமாரியாக தாக்கினார். இதில் பலத்த காயமடைந்த ஆனந்த் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.சிறுவன் மீதான விசாரணைஇது தொடர்பாக பொள்ளாச்சி போலீ ஸார் வழக்குப் பதிவு செய்து 7 பேரையும் கைது செய் தனர். இந்த வழக்கு கோவை 5வது கூடுதல் அமர்வு நீதிமன்றத்தில் நடைபெற்றது.

வழக்கை விசாரித்த நீதிபதி சிவக்குமார், குற்றம் சாட்டப்பட்ட சதீஷ்குமார், வின்சென்ட், சிவமூர்த்தி, ஜெயக்குமார், விவின் தாஸ், கார்த்திக் ஆகியோருக்கு ஆயுள் சிறை தண்டனை, ரூ.5 ஆயிரம் அபராதமும் விதித்து உத்தரவிட்டார். சிறுவன் மீதான விசாரணை, சிறுவர்களுக்கான நீதிமன்றத்தில் தனியாக நடைபெற் று வருகிறது.

# தேசியவாத காங்கிரஸ் தலைவராக சுனேத்ரா பவார் தேர்வு

மும்பை, பிப்.28-

மகாராஷ்டிர துணை முதல்வர் சுனேத்ரா பவார் நேற்று தேசியவாத காங்கிரஸின் தலைவராக தேர்வு செய்யப்பட்டார்.

மகாராஷ்டிர முன்னாள் துணை முதல்வரும், தேசியவாத காங்கிரஸின் (என்சிபி) தலைவருமான அஜித் பவார் கடந்த ஜனவரி 28ம் தேதி நேரிட்ட விமான விபத்தில் உயிரிழந்தார். இதைத் தொடர்ந்து அவரது மனைவி சுனேத்ரா பவார் கடந்த ஜனவரி 31ம் தேதி மகாராஷ்டிர துணை முதல்வராக பதவியேற்றுக் கொண்டார்.

இந்த சூழலில் தேசியவாத காங்கிரஸின் தேசிய நிர்வாகிகள் குழுக் கூட்டம் மும்பையில் நேற்று நடைபெற்றது. இதில் துணை முதல்வர் சுனேத்ரா கட்சியின் தேசிய தலைவராக தேர்வு செய்யப்பட்டார். முன்னாள் முதல்வர் அஜித் பவாரின் மறைவால், பாராமதி சட்டப்பேரவைத் தொகுதிக்கு விரைவில் இடைத்தேர்தல் அறிவிக்கப்பட உள்ளது. இந்த தொகுதியில் சுனேத்ரா பவார் போட்டியிட உள்ளார்.

அவர் போட்டியின்றி தேர்வு செய்யப்படக்கூடும் என்று தகவல்கள் வெளியாகி உள்ளன. துணை முதல்வர் சுனேத்ரா மாநிலங்களவை எம்.பி.யாக பதவி வகித்தார். இந்த பதவியை அவர் அண்மையில் ராஜினாமா செய்தார். சுனேத்ராவின் மூத்த மகன் பார்த் பவார், மாநிலங்களவை எம்.பி. பதவிக்கு பரிந்துரை செய்யப்படுவார் என்று என்சிபி செயல் தலைவர் பிரபுல் படேல் தெரிவித்துள்ளார்.



■ தமிழ்நாடு முதலமைச்சர் சென்னை தலைமைச் செயலகத்திலிருந்து காணொளி காட்சி வாயிலாக இந்து சமய அறநிலையத்துறை சார்பில், தென்காசி மாவட்டம் குற்றாலம் அருள்மிகு திருக்குற்றாலநாதர் சுவாமி திருக்கோவிலில், ரூ.9.76 கோடி மதிப்பீட்டில் திருக்கோவில் பணியாளர்களுக்கான குடியிருப்பு கட்டடம் கட்டுவதற்கான பணியினை துவக்கி வைத்த நிகழ்வில், தென்காசி சட்டமன்ற உறுப்பினர் எஸ்.பழனி நாடார் தென்காசி இந்து சமய அறநிலையத்துறை உதவி ஆணையர் ஆறுமுகம் ஆகியோர் கலந்து கொண்டனர். இந்நிகழ்வில், அறங்காவலர் குழுத்தலைவர் சக்திமுருகேசன் மற்றும் உறுப்பினர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



# நெல்லை குமாரபுரத்தில் நவீன உடற்பயிற்சி கூடம் சபாநாயகர் அப்பாவு திறந்து வைத்தார்

நெல்லை, பிப்.28-

தமிழக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் நல்லாட்சியில், கிராமப்புற இளைஞர்களின் நலன் கருதி உருவாக்கப்பட்ட இந்த உடற்பயிற்சி கூடத்தை, தமிழ்நாடு சட்டமன்ற சபாநாயகர் திரு. மு. அப்பாவு MLA அவர்கள் ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார்.

நெல்லை மாவட்ட பஞ்சாயத்து மற்றும் திட்டக்குழு தலைவர், ராதாபுரம் கிழக்கு ஒன்றிய செயலாளர் VSR.ஜெகதீஷ் திறந்து வைத்த போது, உடன் ஊராட்சி ஒன்றிய கூட்டமைப்பு தலைவரும், குமாரபுரம் ஊராட்சி மன்ற தலைவருமான அனிதா பிரின்ஸ், மாவட்ட பிரதிநிதி முன்னாள் கவுன்சிலர் ராஜன், ஒன்றிய கவுன்சிலர் ஜெஸி, உறுமன்குளம் பொன் இசக்கி பாண்டியன், ஒன்றிய விவசாய அணி அமைச்சியார், முன்னாள் மாவட்ட பிரதிநிதி ஐ ஆர் ரமேஷ், முன்னாள் நகர செயலாளர் அன்பழகன்,

துணைத் தலைவர் அனிஷா பயஸ், வார்டு உறுப்பினர்கள் அன்னலிங்கம், சின்ன பாண்டி, ராஜதுரை, கிளைச் செயலாளர் தமிழ் ராஜா, செல்லத்துரை, சுவிஸ் சாலமோன் டென்னிஸ் பொன்கலன், பலவேசம்

மற்றும் மாவட்ட கழக, ஒன்றிய கழக, கிளை கழக நிர்வாகிகள், கழக உடன்பிறப்புகள் மற்றும் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.



# திசையன்விளையில் உலக தையல் தொழிலாளர் தின விழா பட்டாசு வெடித்து கொடியேற்றம்

திசையன்விளை பிப். 28-

உலக தையல் தொழிலாளர் தினத்தை முன்னிட்டு நெல்லை மாவட்டம் திசையன்விளை வட்டார தையல் தொழிலாளர் சங்கம் சார்பில், திசையன்விளை உடன்குடி ரோட்டில் உள்ள சங்க அலுவலகம் முன்பு மாவட்டத் தலைவர் ஆதிலிங்கம் பட்டாசு வெடிக்க கொடியேற்றினார். தையல் தொழில் வாழ்க ! தையல் தொழிலாளர் ஒற்றுமை ஓங்குக ! என நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் உற்சாகத்துடன் கோஷமிட்டனர். கொடியேற்றிய பின் அனைவருக்கும் இனிப்பு வழங்கி மகிழ்ச்சியை பரிமாறிக் கொண்டனர்.

நிகழ்வில் திசையன்விளை வட்டார செயலாளர் ஜெபக்குமார் , பொருளாளர் விஜய ராஜன் , துணைச் செயலாளர் ஜெபஸ்டின் செல்வகுமார், மாவட்ட பிரதிநிதி செல்வ கணேசன் ராஜசேகர், செயல் குழு உறுப்பினர்கள் முனியசாமி , ஜெய் கணேஷ் ,ராஜசிங் , அசோக்குமார் ஞான இரட்சகன், உறுப்பினர்கள் அலெக்ஸ் பெல்லார்மின், தன்சுல் சீதை உட்பட பலர் கலந்து கொண்டனர்.



# போடிபட்டியில் முன்னாள் முதல்வர் அம்மா 78வது பிறந்தநாள் விழா கொண்டாட்டம்

திருப்பூர், பிப்.28-

திருப்பூர் புறநகர் கிழக்கு மாவட்ட கழக செயலாளரும், மடத்துக்குளம் சட்டமன்ற உறுப்பினருமான சி.மகேந்திரன் அவர்களின் வழிகாட்டுதலின்படி, தமிழக முன்னாள் முதல்வர் அம்மா அவர்களின் 78 வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு போடிபட்டி அ.இ.அ.தி.மு.க. கிளை கழகம் சார்பாக சிறப்பான நிகழ்வு நடைபெற்றது.

உடுமலை தெற்கு ஒன்றிய கழக செயலாளர் போகநாதன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில், அம்மா அவர்களின் உருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் போடிபட்டி அ.இ.அ.தி.மு.க. கழக பொறுப்பாளர் வே.ரமேஷ் (எ) ராமசாமி, கிளைக் கழகச் செயலாளர்கள் நாகமுத்து, விஜயகுமார் மற்றும் சார்பணி பொறுப்பாளர்கள் கலந்து கொண்டு பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கினார்கள்.

# சேவை செய்வோம்... தேசம் காப்போம்! திசையன்விளையில் மின்னும் இளைய பாரதம்



திசையன்விளை, பிப்.28-

திசையன்விளையில் அமைந்துள்ள மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக கல்லூரியின் நாட்டு நலப்பணித் திட்ட அலகு 184 சார்பில் நடைபெற்று வரும் ஏழுநாள் சிறப்பு முகாம் நான்காம் நாளை சிறப்பாக எட்டியது. இந்நிகழ்வில் நாட்டு நலப்பணித் திட்ட தென்மண்டல இயக்குநர்முனைவர் சாமுவேல் செல்லையா அவர்கள் தலைமை விருந்தினராக கலந்து கொண்டார். மேலும் மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் நாட்டு நலப்பணித் திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் அ.வெளியப்பன் அவர்கள் முன்னிலை வகித்தார்.

நிகழ்ச்சியின் தொடக்கத்தில் நாட்டு நலப்பணித் திட்ட அலுவலர் முனைவர் பலவேச கிருஷ்ணன் அவர்கள் வரவேற்புரை வழங்கி, முகாமின் நோக்கமும் இதுவரை மேற்கொள்ளப்பட்ட சமூகச் செயல்பாடுகளும் குறித்து விளக்கினார். தொடர்ந்து, தென்மண்டல இயக்குநர் முனைவர் சாமுவேல் செல்லையா அவர்கள் தன்னார்வ மாணவர்களைப் பாராட்டி உரையாற்றினார். சமூகச் சேவையின் அவசியத்தையும் இளைஞர்கள் நாட்டின் முன்னேற்றத்தில் வகிக்கும் பொறுப்பையும் அவர் வலியுறுத்தினார்.

முகாமின் ஒரு பகுதியாக கிராமச் சுத்தம், சுகாதார விழிப்புணர்வு, சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் பொதுமக்கள் தொடர்பு போன்ற பணிகள் சிறப்பாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. மாணவர்களின் ஒழுக்கம், ஒற்றுமை மற்றும் அர்ப்பணிப்பு உணர்வு சிறப்பு விருந்தினர்களால் பாராட்டப்பட்டது.

வணிகவியல் துறைத் தலைவர் ஒயிட்டன் சகாயராஜ் அவர்கள் நன்றியுரை வழங்கினார். தமிழ் துறைப் பேராசிரியர் ராமபாண்டி, ஊர் பொதுமக்கள், நாட்டு நலப்பணித் திட்ட தன்னார்வ மாணவர்கள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டு நிகழ்ச்சியைச் சிறப்பித்தனர்.



■ தென்காசி நகராட்சி மங்கம்மா சாலைப் பகுதியிலுள்ள நகர்ப்புற அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில், 18 வயதிற்கு மேற்பட்ட ஆண்கள் மற்றும் பெண்களுக்கு ஒருங்கிணைந்த புற்றுநோய் பரிசோதனைக்கான அழைப்பிதழ் வழங்கும் திட்டத்தினை, மாவட்ட வருவாய் அலுவலர் சீ.ஜெயச்சந்திரன் துவக்கி வைத்து, பொதுமக்களின் வீடுகளுக்கே சென்று அழைப்பிதழ்களை வழங்கினார். உடன் மாவட்ட சுகாதார அலுவலர் மருத்துவர் வி கோவிந்தன் உள்ளார்.

# தென் மாவட்டத்தில் முதன்முறை எஸ். வீராச்சாமி செட்டியார் பாலிடெக்னிக் கல்லூரியில் 4 புதிய தொழில்நுட்ப பாடப்பிரிவுகள் அறிமுகம்

புளியங்குடி, பிப். 28-

தொழில்நுட்ப உலகில் அறிவியல் சார்ந்த வளர்ச்சியில் தடம் பதிக்கும் விதமாக, புளியங்குடி எஸ். வீராச்சாமி செட்டியார் பாலிடெக்னிக் கல்லூரியில் இந்த ஆண்டு முதல் நான்கு புதிய நவீன பாடப்பிரிவுகள் தொடங்கப்படவுள்ளதாக கல்லூரி முதல்வர் பேராசிரியர் இசக்கி முத்து தெரிவித்துள்ளார்.*புதிய பாடப்பிரிவுகள்:* டெல்லியில் உள்ள அகில இந்திய தொழில்நுட்பக் கல்வி இயக்குனரகம் (AICTE) அங்கீகாரம் அளித்துள்ள அந்த நான்கு பாடப்பிரிவுகள் பின்வருமாறு: ஃபயர் டெக்னாலஜி அண்ட் சேஃப்டி (Fire Technology and Safety) ஏர் கிராஃப்ட் மெயின்டனன்ஸ் இன்ஜினியரிங் (Aircraft Maintenance Engineering) பயோமெடிக்கல் எலக்ட்ரானிக்ஸ் (Biomedi-



cal Electronics) கம்ப்யூட்டர் நெட்வொர்க்கிங் (Computer Networking)

*வேலைவாய்ப்பு மற்றும் சிறப்பம்சங்கள்:*

இது குறித்து முதல்வர் இசக்கிமுத்து கூறுகையில், "இந்த பாடப்பிரிவுகள் மூலம் மாணவர்களுக்கு விமானத்துறை, மருத்துவத்துறை மற்றும் வெளிநாடுகளில் அதிக வேலைவாய்ப்புகள் உள்ளன. மேலும், அரசுப் பணிகளில் சேருவதற்கான வாய்ப்புகளும் இதில் பிரகாசமாக உள்ளன.

இதற்காக அனுமதி அளித்த எஸ் வீராசாமி செட்டியார் கல்விக் குழுமங்களின் தலைவர் டாக்டர் M. முருகையா மற்றும் செயல் இயக்குனர் விக்னேஷ் வீராசாமி அவர்களின் அறிவுறுத்தலின்படியும், எஸ் வீராசாமி செட்டியார் கல்வி குழுமங்களின் வளர்ச்சி இயக்குனர் டாக்டர் ஜமால் முகமது ஜுபேர் மற்றும் கல்வி குழுமங்களின் மேலாளர் தங்கப்பிள்ளை அவர்களின் ஆலோசனையின்படி பாடப்பிரிவுகள் உதயமாகின்றன ஆகையால் அனைத்து ஆசிரியர்களுக்கும் பெற்றோர்களுக்கும் மாணவர்களுக்கும் தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வாறு கல்லூரி முதல்வர் பேராசிரியர் இசக்கிமுத்து தெரிவித்துள்ளார்.



■ திருநெல்வேலி மாவட்டம் திசையன் விளை நகர தமிழக வெற்றி கழகம் சார்பில், விசில் சின்னத்தை பரப்பும் முகமாக மக்கள் சந்திப்பு நிகழ்ச்சி நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு நகரச் செயலாளர் கில்லி ராஜா தலைமை தாங்கினார். மாவட்ட மருத்துவர் அணி அமைப்பாளர் டாக்டர் கிறிஸ்டோபர் முன்னிலை வகித்தார். நிகழ்ச்சியில் சுரேஷ், பேச்சிமுத்து, சதீஷ், குமார், வினோத் நயினார், ராம் சுரேஷ், அல்டாப், நவாஸ், வடிவு, அபிநயா, சாந்தி உட்பட பலர் கலந்து கொண்டனர். விழா ஏற்பாட்டினை வார்டு செயலாளர் ராஜ்மோகன் சிறப்பாக செய்திருந்தார்.

# தேர்தல் ஆணையத்துக்கு உச்ச நீதிமன்றம் நோட்டீஸ்

புதுடெல்லி, பிப்.28-

காமன் காஸ் அமைப்பு தாக்கல் செய்த பொது நல மனுவை உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி சூரிய காந்த் தலைமையிலான அமர்வு விசாரித்தது.

காமன் காஸ் சார்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர் பிரசாந்த் பூஷண் கூறும்போது, "தேர்தலின் போது கட்சிகள் பண பலத்தை பயன்படுத்துவது ஜனநாயகத்தை பாதிக்கிறது. தேர்தல் செலவின கட்டுப்பாடுகள் இருந்தாலும் அது வேட்பாளருக்கு மட்டுமே பொருந்துவதாக உள்ளது" என்று வாதிட்டார்.

இந்த வாதத்தை ஏற்றுக் கொண்ட உச்ச நீதிமன்றம், பொதுநல மனு குறித்து பதில் அளிக்க தேர்தல் ஆணையத்துக்கும், மத்திய அரசுக்கும் உத்தர விட்டு விசாரணையை தள்ளிவைத்துள்ளது.



■ திண்டுக்கல் மாநகராட்சியில் மாமன்ற இயல்பு கூட்டம், மாநகர மேயர் இளமதி ஜோதி பிரகாஷ் மற்றும் துணை மேயர் ராஜப்பா தலைமையில் நடைபெற்றது உடன் அனைத்து மாமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.



■ பாரதிய ஜனதா கட்சி தேசிய செயற்குழு உறுப்பினர் ஆர்.சரத்குமார் அவர்களோடு ராதாபுரம் சட்டமன்ற தொகுதி பாஜக பிரமுகர் உத்திரலிங்கம் திருவண்ணாமலையில் கிரிவலம் வந்து சுவாமி தரிசனம் செய்த போது.










SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003,
Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000